1971 ஜூலை 6] [திரு. துரைமுருகன்]

இராமனதபுரம், தருமபுரி மாவட்டங்களுக்கு நான் செய்ய வேண்டா மென்று சொல்லவில்லை. ஆனல் அவற்றைவிட எங்கள் மாவட்டம் எந்த விதத்திலேயும் உயர்ந்த நிலையில் இல்லை.

இந்த மாமன்றத்தில் ஒன்றை நான் சவால் விட்டுச் சொல்லிக் கொள்வேன். எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்திலே ஏரிகள் எல்லாம் நிரம்பி, வயல்கள் எல்லாம் நீரில் அமிழ்ந்து, வளைந்து வளைந்து ஓடுகிற ஆறுகள், அவற்ருல் வளர்க்கப்படுகின்ற நெல் வயல்கள், அந்த நெல் வயல்களிலே சதிராடும் நெற்கதிர்கள், பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் பச்சைப் பசேல் என்று இருக்கிற காட்சியை எங்கேயாவது எங்கள் மாவட்டத்தில் தொடர்ச்சியாகக் காட்டுவீர்களேயானல், குறிப்பாக என்னுடைய காட்பாடி தொகுதி யில் காட்டினல் நான் என்னுடைய பதவியை ராஜிஞமா செய்யத் தயார். ஆகையினல் என்னுடைய மாவட்டத்திற்குத் தருமபுரி, இராமனதபுர மாவட்டங்களுக்குக் கொடுத்து இருக்கக்கூடிய சலுகைகளைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாமன்றத்திலே நான் கூறி இருக்கும் யோசனைகளை ஏற்று என்னுடைய மாவட்ட மக்கள் நல்ல பயனைப் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு கருத்துகளை எடுத்துக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மானியக் கோரிக்கைகள் மீது பேச விரும்பும் உறுப்பினர்கள் யாராவது இருந்தால் அவர் களுடைய கருத்துக்களை நாளை கூறலாம்.

இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

@ 141. Annual Report of the Tamil Nadu Public Service Commission, 1967–70 issued with G.O. Ms. No. 958, Public (Services-A), dated the 26th March 1971. [Laid on the Table of the House under Article 323 (2) of the Constitution of India).]

B. *Reports Notifications and other Papers.*

102. Notification issued with G.O. Ms. No. 1205, Revenue, dated the 23rd April 1971, in regard to remission of stamp duty in respect of a sale deed in favour of the Seethalakshmi Ramaswami College, Tiruchirappalli.

@ Laid on the Table of the House on 5th July 1971.